LIBRARY
6 DEC 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 28th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பறவைகளை வேட்டையாடல் (வேதாரண்யம்)

398 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலூகாவில் வேதாரண்யம் முதலிய கடற்கரைப் பகுதிகளில் பறவைகளை வேட்டையாடக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) Teal (Small water duck) என்னும் பறவை பயிர்களை நாசம் செய்வதால் அதை மட்டும் வேட்டையாட அனுமதி கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) சில வகை காட்டு நீர்ப்பறவைகளையும், குருவிகளையும் சுடுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

(இ) இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், திருத்துறைப்பூண்டி கடலோரப் பகுதியாக இருப்பதால் அங்கே நிலத்தில் விளைந்த நெல்லை எல்லாம் பறவை அழித்து விடுகிறது. அந்தப் பகுதியில் மாத்திரம் பறவைகளைப்பிடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பறவைகளைப் பிடிப்பது என்றால் அது மிகவும் தொந்திரவாக வந்து சேரும். அவைகளை விரட்டுவதற்கு ஒரு மெஷின் இருக்கிறது. அதைப்பற்றி விவசாய இலாகா மூலமாக விவசாயிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வாங்கி உபயோகித்தால் தொந்திரவு இல்லாமல் இருக்கும்.

திரு. சி. ம. அம்பிகாபதி : ஸார், அந்தச் சிறவி பறவை ஒரு தரம் ஒரு ஏக்கர் நிலத்தில் படையாக விழுந்தால் அத்தனை நெல்லையும் சாப்பிட்டு விட்டுச் செல்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பறவையை மாத்திரம் சுடுவதற்கு அனுமதி தரப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : பறவையைச் சுடக்கூடாது என்று முக்கியக் கேள்வியில் பதில் சொல்லி இருக்கிறேன். ஒரு மணி நேரத்திற்கு இரண்டு நிமிஷத்திற்கு

ஒரு தரம் சப்தம் போட்டுக்கொண்டே இருக்கக்கூடிய மெஷீன் இருக்கிறது. மிகவும் சொற்பத் தொகையை வைத்தே அந்தக் காரியத்தைச் செய்யலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், அமைச்சர் அவர்கள் கூறிய பிரகாரம் அந்த வெடியை வெடித்தாலும் கூட பறவைகள் கலைந்து போவதில்லை. இதெல்லாம் அந்தப் பறவைகளுக்குப் பழக்கமாகி விட்டது. ஆகையால் அதைப் பிடித்தால் தான் அந்த ஆபத்தைத் தடுக்க முடியும். இதைப் பிடிக்கவாவது அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் அல்ல, தென்னார்க்காடு ஜில்லாவிலிருந்து கூட ஒரு பஞ்சாயத்து யூனியனிடமிருந்து இப்படிப்பட்ட தகவல் வந்தது. அவர்களுக்கும் இதைத்தான் சொல்லி வந்திருக்கிறோம். அவர்கள் இப்படிப்பட்ட மெஷீன்களை வைத்திருக்கிறார்கள். பறவையைப்பிடிப்பது என்பது அவ்வளவு சரியல்ல.

பாதுகாப்பு நிதி

* 399 **கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய பாதுகாப்பு நிதி வசூலிக்கக் கள்ளக்குறிச்சி தாலுகா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்திற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளதா ?

(இ) இவர்கள் வசூலித்த தொகை எவ்வளவு ?

(உ) வசூலித்த பூராத் தொகையும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டுவிட்டதா ?

(எ) இல்லையென்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், பாதுகாப்பு நிதிக்கு நாடகம் நடத்தி வசூல் செய்து கொடுப்பதை அரசாங்கத்தார் வேண்டாமென்று இப்போது கருதுகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உண்டு, இல்லை என்று இதற்குப் பொதுவாக விடை அளிக்க முடியாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் பரிசீலனை செய்து, சில சமயங்களில் அனுமதி அளிக்கிறோம், சில சமயங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : ஸார், பாதுகாப்பு நிதிக்காக அவர்களாக நாடகம் நடத்தி நிதி கொடுப்பதை தடுக்கிறார்களா ? அல்லது வேறு யாராவது ஏற்பாடு செய்திருப்பது நிறுத்தி வைக்கப்படுகிறதா ?